மாதாந்த சஞ்சிகை

முடியும் வரை முயற்சிப்போம்

# திறனொளி

THIRANOLI ART & CULTURE MEDIA NETWORK

2017 ஜூன் – ஜூலை | 25/- | திறன் – 08




புதிய ஒரு பூபாளம்

அரம்பூக்கும் ஈத் முபாரக் கவியரங்கு

பக்கம் 15ஐப் பார்க்கவும்

பிரதான அனுசரணை:-

சந்தூர் சவர்க்காரம்

The World Of Hayleys




ஊடக அனுசரணை:- ஆஸாத் FM (இணைய வானொலி)

www.aazathfm.com

திறன் TV (முகநூல்)

வழியாக நேரடி ஒலி, ஒளிபரப்பு செய்யப்படும்.


## உள்ளே!

வாசகர் வட்டம்
ஆரோக்கியமும் சுகவாழ்வும்
கவிதை தூறல்கள்
குர்ஆன் மத்ரஸா அறிமுகம்
மாணவர்களின் ஆக்கங்கள்
தீனுல் இஸ்லாம்
மருத்துவத் தகவல்கள்
பல்துறைத் தகவல்கள்
நூல் அறிமுகம்
விளையாடு களம்
களச் செய்திகள்
பல்சுவை அரங்கம்
பள்ளிவாசல் அறிமுகம்
பல்துறை சார்ந்தோரின் பேட்டி
முன்பள்ளி பாடசாலை அறிமுகம்

பரிசினைப் பெற்றுத் தரும்
திறனொளியின் கேள்வி பதில் மற்றும்
வெற்றியாளர்கள் விபரம்
பக்கம் 13 இல்

**Let's learn English with effortless way**

**By :**
**Mr. M.T. RuMi KhAAn**
**(Director of Royal Future The college of effortless way)**







page 14



Dr. Al-haj. ZA. Bazeer JP
Proprietor

**BAZEER TRAVELS & TOURS**

Agency for Hajj, Umrah Pilgrims
Reg.No: MRCA/Umrah/143/2015



**Eastern Jewellery**

22, Central Road, Sammanthurai-04.
Tel: 0773621628, 0758704065

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்!

இஸ்லாத்தின் ஐம்பெருங் கடமைகளில் நான்காவது கடமையான நோன்பை ரமழான் மாதம் முழுவதும் நோற்ற பின்னர் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் கொண்டாடப்படுகின்றது. சந்திரனின் சுழற்சியை வைத்து கணக்கிடப்படும் இஸ்லாமிய மாதங்களில் ஒன்பதாவது மாதம் புனித ரமழான் மாதமாகும். அகிலத்திற்கும் ஒர் அருட்கொடையான புனித அல்குர்ஆன் ரமழான் மாதத்திலேயே பூமிக்கு அருளப் பெற்றது. இந்த மாதத்தில் விழித்திருந்து, பசித்திருந்து, தனித்திருந்து ஒரு மாத காலமாக நோன்பு நோற்பதுடன், நோன்பானது ஒவ்வொரு முஸ்லிமினுடைய புலனடக்கத்தையும், மனக் கட்டுப்பாட்டையும் உருவாக்கும் சிறந்த ஆன்மீக பயிற்சியாகவும் அமைந்துள்ளது. வெறுமனே பசித்திருப்பதும், தாகித்திருப்பதும் மாத்திரமின்றி, இந்த பயிற்சியின் மூலம் இறையச்சத்தை தன்னகத்தே வளர்த்துக் கொள்வதே நோன்பின் அடிப்படை நோக்கமாகும் என்று அல் குர்ஆன் தெளிவுபடுத்தியுள்ளது. ரமழான் மாதத்தை தொடர்ந்து ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை தென்பட்டதும் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் கொண்டாடப்படுகின்றது.

ஈகைத் திருநாளாம் புனித நோன்புப் பெருநாளை கொண்டாடும் அனைத்து முஸ்லிம்களுக்கும் திறனொளி சஞ்சிகை குழாம் இனிய ஈதுல் பித்ர் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

–ஆசிரியர்–

## திறனொளி 1st

சஞ்சிகைக் குழு

**முகாமையாளர்**
**பிரதம ஆசிரியர்**
**கலைச்சுடர் ஏ.சி.நௌஷாத்**
(அறிவிப்பாளர்)

*ஆசிரியர் குழு*

எஸ்.அப்துல் றாஸிக் JP
(ஓய்வு பெற்ற அதிபர்)
எப்f.எம்.இஹ்ஸான்
இஸ்மாயில் எம் றையூப்f
மௌலவி ஏ.ஆதம்பாவா (B.A)
மௌலவி எம்.ஐ.எம்.கலீல் (தப்லீகி)
அல்-ஹாபிழ் பி.எம். பர்ஹானுத்தீன்
ஐ.எம்.இம்டியாஸ்
எச்.எம்.நாஸிக்
கலைஞர் ஐ.எல்.பரீட்
ஏ.ஆர்.எம்.ஹுஸைன்
கவிதாயினி எம்.ஐ.றமீஸ் நிசா Tr

*ஆலோசகர்*

கலாபூஷணம் மாறன் யூ செயின்
(ஓய்வு பெற்ற அதிபர்)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்!

"நிச்சயமாக அல்லாஹ்
உங்கள் தோற்றங்களையோ
உங்கள் செல்வங்களையோபார்ப்பதில்லை.
மாறாக உங்களுடைய
உள்ளங்களையும் செயல்களையுமே
பார்க்கிறான்"


(முஸ்லிம்: 5012)

Editor
Thiranoli 1st
112, Firthous Palli Road
Sammanthurai - 03
Hot Line :- 067 490 54 03
E-mail:- thiranoliacmn@gmail.com

Nihon Lanka Trading Company (pvt) Ltd

**சம்மாந்துறையில் அனைத்து விதமான மோட்டார் வாகனங்களும்**
**விற்கவும் வாங்கவும் சிறந்த நம்பிக்கையான இடம்**

**நிஹோன் லங்கா ட்ரேடிங் கம்பனி**



Hybride வாகனங்களை உத்தரவாதத்துடன்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்



வாகன இறக்குமதி தீர்வைப்
பத்திரத்திற்கான (Permit) வாகனங்களை
நேரடியாக ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்து
உத்தரவாதத்துடன் பெற்றுக்
கொள்ளலாம்




தொடர்புகளுக்கு

**ARM.Riyasdeen**
**077 041 63 67**
**ILM.Sathik**
**077 44 80 299**

**NIHON LANKA TRADING COMPANY (PVT) LTD**
264, Police Road,
Sammanthurai
Tel: 0672055977
E-mail: riyasdeen_fullmoon@yahoo.com

# களச் செய்திகள்

தயாரிப்பு - இஸ்மாயில் எம் நையூப்




சம்மாந்துறை பிரதேச பாரம்பரிய வைத்தியர்களை கௌரவிக்கும் நிகழ்வானது பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம்.ஐ.எம்.மன்சூர் அவர்களின் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

## இலக்கியச் சந்திப்பு


சம்மாந்துறையில் இறையருட் கவிஞர் ஏ.இப்றாஹீம் அவர்களது தலைமையில் இயங்கி வரும் "படர்க்கை இலக்கிய இணையத்தின்" காத்திரமான இலக்கியச் சந்திப்பு எழுத்தாளரும், பத்திரிகையாளருமான அபூநஜாத் எம்.ஐ. பௌஸ்தீன் அவர்களின் கலைக்கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. அமைப்பின் செயலாளர் கவிஞர் ஐ.எல்.பரீட் அவர்களின் அழைப்பின்பேரில் இவ்விலக்கியச் சந்திப்பில் தென்கிழக்குப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் கலாபூஷணம் மாறன் யூ ஸெயின். எழுத்தாளர் கலாபூஷணம் எஸ்.ஏ. றாஸீக். எழுத்தாளர் எம்.எம்.நௌஷாத். கலாபூஷணம் ஏ.ஸி.இஸ்மாலெவ்வை, கவிஞர் அச்சி முகம்மத், கவிஞர் அலியார், கவிஞர் தாஹிர் உட்பட இன்னும் பலரும் கலந்து கொண்டனர். முதல் நிகழ்வாக இந்திய தமிழ் நாட்டின் பிரபல கவிஞர் கவிக்கோ அப்துல் றஹ்மான் மரணம் எய்தியதை நினைவு கூர்ந்து பிரார்த்தனை நிகழ்வு இடம்பெற்றது. தீர்மானங்களாக, "படர்க்கை இலக்கிய இணையம்" மேலும் சிறப்பாக இயங்குவதற்கு செயற் குழுவை புனரமைப்புச் செய்தல். மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் மாறன் யூ ஸெயின் அவர்களின் "இரத்த நரம்புகள்" எனும் கவிதை நூலினை பிரதேச செயலக கலாசார அதிகார சபையுடன் இணைந்து வெளியிட்டு வைக்க ஆவணை செய்தல். எமது மண்பதியில் சாதனைகள் படைத்து இலங்கி மரணம் எய்திய எழுத்தாளர்கள், கலைஞர்கள் எல்லோரையும் நினைவுகூறும் நிமித்தமாக ஆண்டுதோறும் "தியாகக் கலைஞர்கள் பிரார்த்தனை தினம்" எனும் பெயரில் நினைவுகூர்ந்து வருவதை மேற்கொள்ளல். போன்ற தீர்மானங்கள் எடுக்கட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

நமது நிருபர்



சம்மாந்துறை பிரதேச சமூக சேவை அமைப்புகளின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சமூக சேவை அமைப்புக்களுடனான சந்திப்பு கடந்த 04.06.17 தாருஸ்ஸலாம் வித்தியாலய கேட்போர் கூடத்தில் மிக விமர்சையாக இடம் பெற்றது. இந் நிகழ்வுக்கு அழைக்கப்பட்ட 130 அமைப்புகளில் 118 பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்வை அலங்கரிக்கும் வகையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர். SLM. ஹனிபா வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். மேலும் புதிய அங்கத்தவர்களுக்கு அமைப்பின் நோக்கம், அமைப்பின் கட்டமைப்பு, சமூக சேவை அமைப்புகளின் இயலுமை விருத்தி தொடர்பான திட்ட வரைபு என்பன எடுத்துரைக்கப்பட்டது. சிறப்பு பேச்சாளராக வருகைதந்த இறக்காம பிரதேச செயலாளர் MM.நசீர் தனது ஆக்க பூர்வமான ஆலோசனைகளை வழங்கி தனது ஆதரவினையும் சம்மேளனத்திற்கு வழங்கினார்.

(ஏ.ஆர்.எம்.ஹுஸைன்)



# பள்ளிவாசல் அறிமுகம்



தயாரிப்பு:-
கலாபூஷணம் எஸ்.அப்துல் றாஸீக் JP
(ஓ. பெற்ற அதிபர். மு.தவிசாளர்- மஜ்லிஸ் அஷ்ஷூறா. சம்மாந்துறை)

## தைக்காப் பள்ளிவாசல் – தகிய்யாப் பள்ளிவாசல்

இப்பள்ளிவாசல் சம்மாந்துறையில் மூன்றாவதாக அமையப்பெற்ற பள்ளிவாசலாகும். 1900ம் ஆண்டளவில் இப்பள்ளிவாசல் அமைந்ததாக ஊகிக்க முடிகின்றது. அன்று இப்பள்ளிவாசலிருந்து தெற்காக காடுகளாக காட்சியளித்துக்கொண்டிருந்தன. மக்கள் தைக்காப் பள்ளிக்கு தெற்கில் குடியேறவில்லை. அடர்ந்த காடாக இருந்த படியால் மிருகங்களின் தொல்லைகளுக்கு மக்கள் அடிக்கடி அல்லற்படவேண்டியேற்பட்டது. மிருகங்களில் இருந்தும் துஷ்ட பார்வையிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்காக ஊர்மக்களால் 'தைக்கா' ஒன்று அமைக்கப்படவேண்டியதன் அவசியம் உணரப்பட்டது.

மீராசாஹிப் உலியுல்லாஹ் அவர்கள் இலங்கையில் தங்கிச் சென்ற இடங்களை வெலிகாமத்தைச் சேர்ந்த மௌலானா ஒருவர் அரபுத் தமிழில் பாடிய பாடல் ஒன்றில், சம்மாந்துறை தைக்காப் பள்ளியில் தங்கிச் சென்றுள்ளதாகப் பாடியுள்ளார். அந்தவகையில் இத் 'தைக்கா' இங்கு அமைந்தது எனலாம்.

ஆரம்ப காலகட்டங்களில் தொழுகை நடைபெறாது, ஏனைய சமயச்சடங்குகள் மாத்திரம் நடைபெற்று வந்துள்ள இடமாக மாத்திரம் இருந்து வந்துள்ளது. ஜமாஅத்துல் ஆகிர் மாதத்தில் (மீராகந்தூரி) கல்முனை கடற்கரைப்பள்ளியில் கொடியேற்றி 12 நாட்கள் விழா கொண்டாடி கொடி இறக்கப்பட்டு கந்தூரியுடன் முடிவடைவதுபோல் இங்கும் இச்சடங்கு சம்பிரதாயங்களும் நடைபெறலாயிற்று. 'திருக்கொண்டைவைரம்' மரம் ஒன்று நடப்பட்டு அம்மரத்தின் இரண்டு பக்கங்களிலும் மேலே ஏறிச் செல்வதற்காக படிகள் போன்ற அமைப்பில் வெட்டப்பட்டிருந்தன. கொடியை ஏற்றுவதற்கும், இறக்குவதற்கும் இப்படிகள் பயன்பட்டதாகக் கூறுவர்.

தைக்கா அமையப்பட்டு கொடியேற்றம், கந்தூரி போன்ற சடங்குகள் வருடா வருடம் நடைபெற்று வந்தமையால், இச்சுற்றாடலில் மக்கள் குடியேற்றமும் அதிகரிக்கலாயின. அதனால் தொழுகைக்காகவும் இவ்விடம் விஸ்தரிக்கப்பட்டது. மோட்டுவளை, குறுக்குவளை போன்ற நெடிய மரங்களைப் பெறுவதற்காக கொண்டவட்டுவானுக்கு வண்டில்களில் சென்று 'ராணமரம்' போன்ற உயரமான நெடிய மரங்களை இரண்டு வண்டில்களைச் சேர்த்து எடுத்து வந்ததாக முன்னோர்கள் மூலம் அறிய முடிகின்றது.


கொடியேற்றி 12 நாட்களும் முக்கியமாக இரவு வேளைகளில் சீனடி, சிலம்படி போன்ற கலை நிகழ்ச்சிகளும் பாவாமார்களின் ரபான் பைத், குத்துவெட்டுக்களும் நடைபெற்றன. மக்கள் திரளாக இவற்றைக் கண்டுகளித்தனர். இந்நிகழ்ச்சிகளை சிலர் கண்டுகளிக்க முடியாமல் வயல்வெளிகளில் காவல் காக்கும் வேலைகளில் ஈடுபட்டதன் வெப்புசாரம் ஒரு விவசாயன் உளக்குமுறலாக வெளிப்பட்ட நாட்டார் பாடல் ஒன்று

"மீராகந்தூரி மாதம் விடிய விடிய கொண்டாட்டம்
தாரா விரச எண்ட தல விதியோ அல்லாஹ்வே"

மரத்தினால் கட்டப்பட்டு ஓலையினால் கூரை அமையப்பெற்ற இப்பள்ளி 1950ம் ஆண்டு காலகட்டத்தில் கல்லால் கட்டப்பட்டு, ஓடு வேயப்பட்டு கட்டிடமாகக் காட்சிய ளித்தது. 1976ம் ஆண்டில் வீசிய சூறாவெளியினால் இப்பள்ளிவாசலின் முன்பக்கச் சுவர் முற்றாக விழுந்ததினால் மீண்டும் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்பட்டன. இதற்கிடையில் 1960ம் ஆண்டளவில் சுபஹ் தொழுகைக்கு வந்த மக்கள் கொடிமரத்தில் நேற்று ஏற்றி வைக்கப்பட்ட கொடியைக் காணாது அல்லோ கல்லோலப்பட்டனர். நெல்லுப்போடி ஆற்றடி மதுரை மரத்தில் இக்கொடி தொங்கவிடப்பட்டிருந்தது. அன்று ஊரே ஒன்று கூடி பலதும் பத்துமாக பேசிக்கொண்டனர். கொடியேற்றமும்,மார்க்க விரோத செயற்பாடுகளும் அதிகரித்துச் சென்றமையால் இவற்றை விரும்பாத ஒரு புரட்சிக் குழுவினர் இச்செயற்பாட்டைச் செய்திருக்கலாம் என அறிய முடிந்தது. அப்போது ஊரில் இயங்கி வந்த சமூக விழிப்புணர்வுக் கழகங்களின் பெயர்களும், சில முக்கியஸ்தர்களின் பெயர்களும் அடிபட்டன. என்றாலும் அன்றோடு (1960) தைக்காப் பள்ளியில் கொடியேற்றமும், அதைத் தொடர்ந்த அனாச்சாரங்களும் அடியோடு நின்றுவிட்டன எனலாம். 1985களில் மஜ்லிஸ் அஷ்ஷூறா அமைப்பு ஏற்பட்டதன் பின்னர் பள்ளிவாசல் அமைப்புக்களிலும் அதன் நிருவாக அதன் நிருவாக பரிபாலனங்களிலும் பாரிய விழிப்புணர்வு ஏற்படலாயிற்று அந்தவகையில் சிறிய எனப் பொருள்பட்ட 'தைக்கா இறையச்சம்' எனும்தொனிப்பொருளில் 'தகிய்யா' பள்ளி வாசலாக பெயர் மாற்றம் கொண்டதாக விளங்கத் தொடங்கியது எனலாம்.

பெரிய பள்ளியில் மையத்து அடக்கஞ் செய்வது முற்றாகத் தடைப்பட்டதால் தகிய்யாப் பள்ளியின் மையவாடி மேலும் விஸ்தரிக்கப்பட்டு, மண்போட்டு மேலும் உயர்த்தப்பட்டு ஒரு ஒழுங்கு அமைப்பில் பராபரிக்கப்பட்டு வருவதும் சிறப்பம்சமாகும். 2006ம் ஆண்டில் தேசிய மீலாத் விழா சம்மாந்துறையில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மர்ஹூம் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் அமைச்சர் அவர்களினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதனை முன்னிட்டு தகிய்யாப் பள்ளியின் புனர்நிர்மாணப் பணிகளும் மும்முரமாக நடைபெறலாயிற்று. பிரதான வீதியில் அமைந்துள்ள இப்பள்ளிவாசல் மிக அழகாக காட்சியளித்துக் கொண்டிருக்கும் தோற்றம் நமது நகர விஸ்தரிப்பின் முன்மாதிரியான நடவடிக்கைகளில் ஒன்றாகக் கொள்ளலாம்.






சம்மாந்துறை பிர்தௌஸ் பள்ளிவாசலில் இயங்கி வரும் பிர்தௌஸ் மக்தப் மத்ரஸாவின் ஆண்டு பூர்த்தி விழா அண்மையில் நடைபெற்றது. மத்ரஸாவின் அதிபர் எம்.ஐ. கலீல் தப்லீகி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம பேச்சாளராக வடகிழக்கு மக்தப் மத்ரஸாக்களின் பொறுப்பாளர் ஏ.எல்.நிலாம்டீன் அந்-நூரி அவர்கள் கலந்து சிறப்பித்தார். நிகழ்வில் மாணவர்களுக்கு சான்றிதழ். நினைவுச் சின்னம் மற்றும் பரிசில்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டது.

# ஆரோக்கியமும் சுகவாழ்வும்

தயாரிப்பு:-
Dr. MCM.காலித் (BUMS-SL)- வைத்திய அத்தியட்சகர்
மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை, சம்மாந்துறை



## இரைப்பை அழற்சி (Gastritis)

எமது உடலின் Digestive System என அழைக் கப்படும் உணவுச் சமிபாட்டுத் தொகுதியில் ஏற்படும் பல நோய்களுள் இரைப்பை அழற்சி (Gastritis) எனப்படும் நோயானது இரைப்பையினுள் சுரக்கப்படும் சீதம் அல்லது கரியம் எனப்படும் இரைப்பையின் அகச் சுவரை மூடியிருக்கும் படை சிதைவடைவதனால் இரைப்பை அழற்சி ஏற்படுகின்றது.

இரைப்பை அழற்சிக்கு உட்பட்ட ஒருவருக்கு வயிறு எரிதல் அல்லது நெஞ்செரிவு சில வேளைகளில் நோவும் காணப்படலாம். இரைப்பை அழற்சி ஏற்படுவதற்கான காரணங்கள் வருமாறு:-

1- புகைத்தல். மது அருந்துதல். 2- குறைந்தளவு நீர் அருந்துதல். 3- சில நோய் நிவாரண மாத்திரைகளை அடிக்கடி உட்கொள்ளுதல். 4- உரிய வேளைகளில் உணவு உண்ணாது தாமதித்து உண்ணல். 5- உறைப்பு சுவையுள்ள உணவுகளை அதிகமாக உண்ணல். உ+ம்:-அதிக மிளகாய்ப் பாவனை
6- எண்ணெய்ச் சத்து அதிகமுள்ள எண்ணெயில் பொரித்த உணவுகளை அதிகமாக உண்ணல்.
உ+ம்:- நெய்ச்சோறு. பெட்டீஸ். ரோள்ஸ். வடை. சமுசா. ஜம்பர்.
7- அதிக சூடான பானங்களை அருந்துதல். உ+ம்:-கோப்பி. தேனீர். 8- அதிக குளிரான பானங்களை அருந்துதல்.
உ+ம்:-மென்பானங்கள் 9- அமில அல்லது புளிப்பு சுவையுள்ள பானங்கள் மற்றும் அமில உணவுகளை அதிகமாக உட்கொள்ளல். உ+ம்:-புளிக்கதளி வாழைப்பழம். டின்களில் அடைக்கப்பட்ட செயற்கை பானங்கள். 10- ஈஸ்ட் சேர்க்கப்பட்ட உணவுகளின் அதிகரித்த பாவனை. உ+ம்:-கோதுமைப் பண்டங்கள். 11- Spices எனப்படும் வாசனைத் திரவியங் களின் அதிக பாவனை. உ+ம்:-மிளகு. ஏலம். கிராம்பு. கறுவா. இஞ்சி.... 12- உரிய வேளையில் உறங்காது விழித்திருத்தல். 13- அதிக மன அழுத்தத்திற்கு உட்படுதல். 14- சில பக்றீரியா தாக்கங்கள் ஏற்படுதல் அல்லது தொற்றல்கள் ஏற்படுதல். 15- செயற்கையான சுவையூட்டிகள். நிறங்கள். நிறமூட்டிகள் அதிகமாகச் சேர்க்கப்பட்ட உணவுகளின் அதிகரித்த பாவனை. 16- குறைந்தளவு நார்ப்பொருட்கள் கொண்ட உணவுகளை அதிகமாக உட்கொள்ளல்.


மேற்கூறப்பட்ட காரணிகளை தவிர்த்துக் கொள்வதால் இரைப்பை அழற்சி நோயிலிருந்தும் விலகிக் கொள்ள லாம். அத்தோடு இரைப்பை அழற்சிக்குட்பட்ட ஒருவர் தெரிவு செய்ய வேண்டிய உணவுகள் வருமாறு:-
1- சுத்தமான அளவான வெப்பநிலையுடைய பசுப்பால்.
2- பிட்டும் பால்சொதியும் (உறைப்பற்ற)
3- புதிய தயிர். யோகட்
4- சோறு உறைப்பற்ற பால்சொதி
5- இடியப்பம். உறைப்பற்ற பால்சொதி
6-புளிப்பு சுவையற்ற பழங்கள். உ+ம்:-சீனிக் கதளி வாழைப்பழம்- றப்பர் கதளி

இரைப்பை அழற்சியால் பாதிக்கப்படுபவர்கள் வைத்திய ஆலோசனையுடன் மேற்கொள்ள வேண்டிய மருத்துவம்

1- கற்றாளையின் உள்ளீடான ஜெல்லுடன் சுத்தமான தேனைக் கலந்து 2 அல்லது 3 முறை பருகுதல்.
2- சுசுகாவை நீரில் ஊற வைத்துப் பருகுதல்.
3- இறைச்சிலை. சதைகரைச்சான் இலையை சுத்தம் செய்து உண்ணுதல்.



ஆஸாத் FM இல்
வைத்தியரைக் கேளுங்கள்
சிறப்பு நிகழ்ச்சி
இணைய வானொலி ஆஸாத் FM இல்
பிரதி சனிக்கிழமைகளில் மாலை
6.00 மணி முதல் 7.00 மணி வரை
ஒலிபரப்பாகிறது
நேரடி நிகழ்ச்சி
வைத்தியரைக் கேளுங்கள்
வைத்தியம் சம்பந்தமாக விளக்கமளிக்கிறார்
டாக்டர் எம்.சி.எம்.காலித் அவர்கள்.
கேட்டு பயன்பெற பிரவேசியுங்கள்
www.aazathfm.com

இப்ஹாம் என்டபிரைசஸ்
அனைத்துவித மூலிகை மருந்து மாத்திரைகள், பட்டோலைச் சரக்குகள், வாசனைத் திரவியங்கள், அரிதான மூலிகைகள்

மூக்குக் கண்ணாடிகள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
இப்ஹாம் என்டபிரைசஸ்
இப்ஹாம் என்டபிரைசஸ்
ஹிஜ்ரா சந்தி
பொலிஸ் வீதி
சம்மாந்துறை
தொ.இல:- 0672260615/ 0771895865.

# மாணவர் பல்சுவை அரங்கம்



## பழமொழியும் விளக்கமும்

**ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தா தன் பிள்ளை தானே வளரும்**

நாம் அறிந்த விளக்கம் :

**மற்றவர்களுக்கு நாம் செய்யும் நன்மையின் தன்மை நம்மையும் நம் குடும்பத்தையும் அதே நன்மையின் தன்மை கொண்டு உயர்த்தும் என்பது இதன் உண்மை விளக்கம் அல்ல.**

விளக்கம் :

**ஊரான் பிள்ளை என்பது தம் மனைவியை குறிக்கும். அவள் பிள்ளை சுமந்திருக்கும் காலத்தில் அவளை அவள் கணவன் நல்ல முறையில் பராமரிப்பான் எனில் அம்மனைவி வயிற்றில் வளரும் அவனது குழந்தையும் ஆரோக்கியமாக நலமுடன் வளரும். இதுவே இதன் உண்மை விளக்கம் ஆகும்.**


**றக்கீஸா**
**சம்மாந்துறை**

1- இலக்கியத்துக்காக அதிகம் பரிசு பெற்ற நாடு? பிரான்ஸ்.
2- இந்தியாவில் உயரமான சிகரம்? எவரஸ்ட்.
3- உலகிலேயே மிகப்பெரிய நாட்டின் பெயர்? ரஷ்யா.
4- பெல்ஜியத்தில் தேசிய சின்னம்? சிங்கம்.
5- படகுகளின் நகரம் என அழைக்கப்படுவது? வெனிஸ் (இத்தாலி)
6- நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு என்ற சிறப்பு பெற்றது? நோர்வே.
7- இங்கிலாந்தின் பழைய பெயர்? ஆல்பியன்.
8- முத்துக்களின் தீவு என்று அழைக்கப்படும் நாடு? பஹ்ரைன்.

எல்.எப்.ஹஸீபா- சம்மாந்துறை

ஆக்கங்களை எழுதி அனுப்பி பரிசினை பெற்றுக்கொள்ளுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி
"மாணவர் பல்சுவை அரங்கம்"
திறனொளி
112, பிர்தௌஸ் பள்ளி வீதி,
சம்மாந்துறை-03


அஸ்ரப் வெல்டிங்



கேட், ரோலிங் கேட்,
கிறில், ஏணிப்படிகள்,
கூரைகள், கூடாரங்கள்

வெல்டிங் வேலைகள் அனைத்தையும்
தரமானதாகவும் உறுதியுடனும் செய்து
பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

அஸ்ரப் வெல்டிங்
அம்பாறை வீதி, ஜமாலியா பள்ளி முன்பாக
சம்மாந்துறை.
077 32 79 453


## இப்படி கேள்விப்பட்டீர்களா?
## ஞாபகம் இருக்கு! ஞாபகம் இருக்கு!

1960 களுக்கு முன்பு நமது பிரதேசத்தில் ஆங்காங்கே சிறு சிறு குளங்கள் இருந்தன. ஆனால் அக்குளங்களை இன்று காண முடியவில்லை. காணாமல் போய்விட்டதென்றே கூறலாம். அக்குளங்களின் அடிச்சுவடுகளோ இல்லாதளவிற்கு அவைகள் முற்றாக மறைந்து விட்டன. அக்குளங்கள் இருந்த இடங்களில் இன்று குடியிருப்பு நிலங்களாகவும். பொதுத் தேவைக்கான இடங்களாகவும் முற்றாக மாறிவிட்டன. அக்குளங்களின் பெயர்கள் கூட சமூகத்தில் இருந்து மறக்கப்பட்டுவிட்டதென்றே கூறலாம்.

அக்குளங்களாவன:-

1. இராமர்குளம்:- தற்போதைய நூர்ப் பள்ளிவாசலின் பின்புறமாக இருந்துள்ளது.

2. சிவனா குளம்:- செயினாகுளம் என்றும் அதற்கு இன்னுமொரு பெயர் இருந்துள்ளது. அல்-முனீர் வித்தியாலயத்திற்கும். தைக்காப்பள்ளிக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்திருந்தது. இன்றைய அல்-முனீர் வித்தியாலயத்திற்கு ஆரம்ப பெயராக 1960களில் சிவனா குளம் அ.மு.க பாடசாலை என்றே அழைக்கப்பட்டதையும் அறிகின்றோம்.

3. சின்னப்பள்ளிக் குளம்:- சின்னப்பள்ளிக்கு அருகாமையில் அமைந்திருந்த படியால் இப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டதெனலாம். இன்றைய தாறுல் ஹஸனாத் குர்ஆன் மனன வளாகம் அமைந்துள்ள இடமாகும். மர்ஹூம் டொக்டர் மீராலெவ்வை மர்ஹூம் ஹஸன் மௌலவி ஆகியோரின் முயற்சியால் தூர்ந்து போயிருந்த குளம் ஊரில் உள்ள வண்டில் காரர்களின் உதவியோடு முற்றாக நிரப்பப்பட்டு குர்ஆன் மனன மத்ரஸாவாக இன்று வரை இயங்கி வருகின்றது.

4. மடத்துக் குளம்:- திராயர் குளம் என்றும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இன்று தேசிய பாடசாலையின் விடுதிக் கட்டிடம் அமைந்துள்ள பகுதியே இக்குளம் இருந்த இடமாகும். சம்மாந்துறை துறை முகத்தின் ஊடாக மட்டக்களப்புத்தரவையை வந்தடையும் வெளியார் தங்கிச் செல்வதற்காக மடம் இருந்துள்ளது. அதன் பக்கத்தில் இக்குளம் இருந்ததால் மடத்துக்குளம் என அழைக்கப்படலாயிற்று.

5. உடையார் குளம்:- வீரமுனை வீதியின் தெற்காகவும் சாலி வீதியின் கிழக்காகவும் இக்குளம் அமைந்திருந்தது. உடையார் பதவி வகித்த ஒருவர் இதன் அருகாமையில் வசித்தமையினால் இப் பெயர் பெற்றிருக்கின்றது. இன்று இக்குளம் இருந்த இடம் முற்றாக மூடப்பட்டு குடியிருப்பு நிலங்களாக. வீடுகளாக காட்சியளித்துக் கொண்டிருப்பதை காணலாம். 1977ல் தனியார்களால் அபகரிக்கப்பட்டிருந்த இவ்விடத்தில் உடையார் குளம் வித்தியாலயம் என்ற பெயரோடு ஒரு பாடசாலை ஆரம்பிப்பதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தும், அவ்விடத்தை பிடித்து வைத்திருந்தவர்களின் எதிர்பார்ப்பால் வேறிடத்துக்கு மாற்றப்பட்டது. உடையார் குளம் வித்தியாலயம் இன்று அஸ்மா வித்தியாலயம் என்ற பெயரோடு மலையடிக்கிராமத்தில் இயங்கி வருவதை காணலாம். இக்குளங்கள் அன்றைய மக்களின் பற்பல தேவைகளுக்கு பயன்பட்டு வந்துள்ளன. இக்குளங்களில் மழை நீர் தேங்கி

தொடர் 13ம் பக்கம்

# தீனுல் இஸ்லாம்

தயாரிப்பு – மௌலவி எம்.ஐ.எம்.கலீல் (தப்லீகி)

## விடை பெற்ற ரமழான் விடுக்கும் செய்திகள்

எல்லாம் வல்ல ஏக இறைவனின் நல்லடியார்களே! விடை பெற்ற இந்த ரமளான் நமக்கு விடுக்கும் சில செய்திகளை இன்றைய உரையில் பார்க்கவேண்டிய கடமை நமக்கு உள்ளது. ஏனெனில் ஒவ்வொரு வருடமும் நோன்பு நோற்கிறோம். அந்த நோன்பு நம்மிடத்தில் ஏற்படுத்திய, இனி ஏற்படகிற மாற்றங்களை ஒவ்வொன்றாக பார்ப்போம்!

### தொழுகை இனி எப்படி இருக்கும்?

"சுப்ஹு", இஷா ஆகிய தொழுகைகளை விட நயவஞ்சகர்களுக்குப் பாரமான தொழுகை வேறு எதுவும் இல்லை. அந்த இரு தொழுகைகளையும் (ஜமாஅத்தாகத்) தொழுவதில் உள்ள நன்மையை மக்கள் அறிவார்களானால் தவழ்ந்தாவது அத் தொழுகைக்கு வந்து விடுவார்கள். இகாமத் சொல்லுமாறு நான் முஅத்தினுக்குக் கட்டளையிட்டு, பின்னர் ஒருவரை இமாமாக நின்று தொழுவிக்குமாறு கூறி அதன் பின்பு யாராவது தொழுகைக்கு வராமல் இருந்தால் அவர்களைத் தீயிட்டுக் கொளுத்த நான் நினைத்தேன்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹு"ரைரா (ரலி)
நூல்: புகாரி 657

என்ற இந்த ஹதீஸ் அதிகாலை மற்றும் இஷா தொழுகைகளில் அலட்சியம் காட்டுவது நய வஞ்சகர்களின் அடையாளம் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அதனால் ஒரு நல்ல முஸ்லிம் இவ்விரு தொழுகைகளில் அலட்சியம் காட்டுவது கிடையாது. அதிலும் குறிப்பாக மழை மற்றும் பனி போன்ற கடுமையான குளிர் காலங்களில் காலையில் எழுவதற்கும், குளிர்ந்த தண்ணீரில் கை, கால் அலம்புவதற்கும், கடமையான குளிப்பை நிறைவேற்றுவதற்கும் சிரமமாக இருந்தாலும் அவற்றை எல்லாம் எதிர் கொண்டு, உண்மையான, நல்ல முஸ்லிம்கள் இந்தத் தொழுகைகளை நிறைவேற்றி வருகின்றனர். இப்படிப்பட்ட கனமான தொழுகையான சுப்ஹு" தொழுகை, நம்மிடம் நிழலிட்டுக் கொண்டிருந்த ரமளான் மாதத்தில் அதிகமான மக்களைக் கவர்ந்து இழுத்தது. ஜு"ம்ஆவை விட அதிகமான மக்களை ரமளானின் சுப்ஹு" தொழுகை தன்னகத்தே கொண்டு வரலாறு படைத்தது. இதற்கே இத்தனை கூட்டம் என்றால் மற்ற நேரத் தொழுகைகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. இவ்வாறு எல்லா நேரத் தொழுகைகளிலும் இரவுத் தொழுகைகளிலும் மக்கள் நிரம்பி வழிந்தனர். இத்தனை ஆயிரக்கணக்கான மக்கள் இறையில்லங்களில் எப்படி நிறைந்து வழிந்தனர்? இது உண்மையில் திருக்குர்ஆனின் ஈர்ப்பு சக்தி தான். அப்பப்பா? பள்ளிகளில் தான் எத்தனை புதுமுகங்கள்! புதுப் பொழிவுகள்! ஊருக்குள் இருப்பவர்கள், ஊருக்கு அப்பால் இருப்பவர்கள் என அத்தனை பேரையும் பள்ளிக்குள் பார்க்க முடிந்தது.

### தொழுகை, தர்மம் எப்படி இருந்தது?

இந்தத் திருக்குர்ஆன் மக்களை தொழுகையின் பால் இழுத்துக் கொண்டு வந்தது போலவே தர்மங்களின் பக்கமும் இழுத்துக் கொண்டு வந்தது.

நபி (ஸல்) அவர்கள் மனிதர்களிலேயே மிகப் பெரும் கொடை வள்ளலாய் திகழ்ந்தார்கள். (சாதாரண நாட்களை விட) ஜிப்ரீல் (அலை) அவர்கள், நபி (ஸல்) அவர்களைச் சந்திக்கும் போது நபி (ஸல்) அவர்கள் மிக அதிகமாக வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்கள் ரமளான் மாதத்தின் ஒவ்வொரு இரவிலும் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து குர்ஆனை நினைவுபடுத்துவார்கள். இருவருமாகத் திருக்குர்ஆனை ஓதும் வழக்கமுடையவர்களாக இருந்தனர். தொடர்ந்து வீசும் காற்றை விட (வேகமாக) நபி (ஸல்) அவர்கள் நல்ல காரியங்களில் மிக அதிகமாக வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி)
நூல்: புகாரி 6

இந்த ஹதீஸில் கூறப்படுவது போன்றே இஸ்லாமிய மக்களும் ரமளானில் ஆகி விடுகின்றனர். அள்ளி அள்ளி வழங்குகின்றனர். அல்லாஹ்வின் அருளை அள்ளிப் பெற்று விடுகின்றனர். இஸ்லாமிய மக்களை இப்படி ஒரு தர்ம சிந்தனையின் பக்கம் கொண்டு வந்தது எது? இந்தக் குர்ஆன் தானே!

உலகத்தில் வேதங்கள் என்று சொல்லப்படுபவை எத்தனையோ உள்ளன. அவையெல்லாம் மக்களை விட்டு விலகி விட்டன. மக்களும் அவற்றை விட்டு விலகி விட்டனர். ஆனால் உண்மை வேதமான இந்தக் குர்ஆன் மட்டும் மக்களை விட்டுப் பிரியவில்லை. மக்களும் இந்த வேதத்துடன் தொடர்பிலிருக்கிறார்கள். அதற்குத் திருக்குர்ஆன் இறங்கிய இந்த ரமளான் மாதம் சிறந்த எடுத்துக்காட்டு.

உண்மையில் இவ்வேதம் இஸ்லாமிய மக்களுக்கு ஓர் இருதயத்தைப் போன்று செயல் படுகின்றது. உடலில் ஓடுகின்ற மொத்த இரத்தத்தையும் தனக்குள் இழுத்து, சுத்தம் செய்து அனுப்பும் இருதயத்தைப் போன்று, திருக்குர்ஆன் உலக முஸ்லிம்களை ரமளானில் தன் பக்கம் இழுத்து, சுத்தப்படுத்தி அனுப்பி விடுகின்றது.

தொடர் 13ம் பக்கம்



# கவிதை தூறல்கள்

தயாரிப்பு – கவிதாயினி எம்.ஐ. நமீஸ் நிஷா

## ஏகத்துவம்

வெயிலெழும்பியே அயலெழும்புமா
மார்க்கம் சொன்னதை மறந்து தூங்குமா
குயிலெழும்பியே குரல் கொடுத்தும்
செவியருந்திடச் சிரமமாகுமா.

பள்ளி வாசலில் பாங்கொலித்தது
வெள்ளி நாளென்றும் விளக்கமுள்ளது
புள்ளி நூறெனும் புனித மார்க்கமாய்ச்
சொல்லித் திரிவதில் சுவனம் உள்ளதா.

தெள்ளி யுரைக்கும் நம் தீன்வழி மறுத்ததா
அள்ளி யுரைத்த நபி அண்ணலை
வெறுத்ததா-நாளை
கொள்ளி எரித்திடும் கொடு நரகென்பதை
எள்ளி நகைத்திடல் இது முறையாகுமா.

அற்புதக் கட்டளை ஆண்டவன் இட்டதும்
சொற்பதக் கோமான் நபி சோபனம் இட்டதும்
நற்பதம் என்று நாம் நாட்டமாய்க் கொண்டில்
கற்பகப் பட்டோலை கைவசம் கிட்டுமே-இன்றேல்
முட்புதர் நிறைந்ததாய் மோட்சமும் இழந்ததாய்
தட்பமும் வெப்பமும் தன்மையில் அனர்த்தமாய்
முற்பட நேருவோம் மூர்க்கத்தில் சேருவோம்-மறை
சொற் பிரகாரமாய் சோபனம் நாடுவோம்.

கானகம் மழைபெறக் கார்முகில் அளித்திடும்
பாரலாம் மழையினால் பரவசம் களித்திடும்
வானகக் கதிரவன் வரமில்லை என்றிடில்
ஊனவன் இவையெலாம் உணரலாம் எங்ஙனம்.

ஒவ்வொரு படைப்புக்கும் உரிமையன் உண்டெனில்
ஒப்பில்லாப் படைப்புக்கும் "அப்பு" ஒன்றிருக்குமே
அன்னவன் உலகத்தின் மன்னவன் என்பதை
அறிவில் நீ உணர்ந்திட தெருவில் ஏன்
அலைகிறாய்.

அபூ அப்கான்
சம்மாந்துறை

## குமுறல்

"சொர்க்கம்" என்ற
வேத சுருதியினை
மீட்டும்
வர்க்க நாதம்
ஒன்று
வானில் கிளம்பிற்று

இதய வீணையை
இசைத்து ஓர்
ஏழை
நரகில் மிதந்து
அழுந்தி
நாதத்தை நோக்குகிறான்

எட்டாத தூரம்
இருந்து மறுகும்
"சொர்க்கம்"
கிட்டாதோ! என்று
கிளர்ந்து
வானை உடைக்கிறான்...!
(சுவாபூஷணம்-மாறன் யூ செயின்)




**கவிக் கடலில் கவி மீன்**
**வடிக்கும் அன்புக்கு இனிய கவிதா**
**நெஞ்சங்களுக்கு திறனொளியின்**
**ஈகைத் திருநாள் வாழ்த்துக்கள்**
**-ஈத் முபாறக்-**

## விடை பெறும் ரமழானே!

வசந்தம் தேடி
வடிவாய்த் தேடி
எம்மோடு ஒன்றித்த
கண்ணிய ரமழானே

தக்வாதாரிகளாய்
தரிசனம் கொடுத்திட
தனியொரு சிறப்பை
தன்வசம் கொண்ட
தனித்துவ மாதமே!

தனியொரு இரவை
ஆயிரம் மாதங்களிலும்
சிறந்ததென சிறப்பிக்கும்
சிறப்புக்குரிய மாதமே!

நீ விடைபெறும் வினாடிகள்
விரைந்து விட்டன
உனை நான் அடைய
இறைவன் எனக்கு தந்த
இயலுமைக்கு
இறை அஞ்சுகிறேன்

இன்னொரு ரமழானை
இயலுமையோடுப் பெற்றிட
இந்த அடியானின்
மூச்சுக் காற்று
முடியாது! என்று
உரைக்குமானால்

இப்போதே உனக்கு
எனது பிரியா விடையை
பிரஸ்தாபிக்கிறேன்

ஏ.எம்.முபாஸித் அல்பத்தாஹ்
ஒழுவில்

## படத்திற்கான கவிதை இல:-01 ற்கான கவிதை

கைதியாக கிடந்தாலும்
கடவுளின் கரிசனம் கண்டு
கையேந்தி காதலிக்கிறேன்
காரணம் மழைதானே....

றமீஸா
சம்மாந்துறை



இப்படத்திற்குப் பொருத்தமான நான்கு வரிக் கவிதைகளை
எழுதி அனுப்புங்கள் கவிதைத் தூறல்கள் பகுதியில்
உங்கள் கவிதையும் இடம்பிடிக்கும்.

## படத்திற்கான கவிதை இல: 02

**கவிதைத் தூறல்கள்**
**படத்திற்கான கவிதை இல-02**
**திறனொளி**
**112, பிரதெளஸ் பள்ளி வீதி**
**சம்மாந்துறை-03**



# சிறு கதை



## தயாரிப்பு: கலைஞர் ஐ.எல்.பரீட்

### ஒற்றுமையே வலிமை !!

கோவில் கோபுரத்தில் சில ஊதா நிறப் புறாக்களும் சில மஞ்சள் நிறப் புறாக்களும் அடைக்கலமாகி இருந்து வந்தன. கோபுரத்தில் திருவிழா வேலைகள் தொடங்க ஆரம்பித்ததால் இது நாள் வரை எதிரும் புதிருமாக இருந்து வந்த இருவகைப் புறாக்கூட்டமும் இப்போது ஒன்று கூடி வேறொரு இடம் தேடி புறப்பட்டன. செல்லும் வழியில் ஓரிடத்தில் வெயிலில் உலர்த்துவதற்காக பரப்பப்பட்ட தானியங்களை கண்டதும் அனைத்தும் ஒன்று கூடி தானியங்களை தின்று தீர்த்து விட்டு மரக்கிளை ஒன்றில் அமர்ந்தன. தானியத்தை உலர்த்தும் பொருட்டு பரப்பி விட்டு சென்ற வேடன் தானிய மணிகள் ஒன்று கூட இல்லாதது கண்டு அதிர்ச்சி யடைந்தான். தானியங்கள் காயப்போட்ட இடத்தில் புறாக்களின் எச்சம் கிடப்பதை பார்த்து வேடன் என்ன நடந்தது என்பதை ஊகித்தான். நாளைக்கு இந்த புறாக்களை எப்படியும் வலை விரித்து பிடித்து விட வேண்டும் என்று முடிவு செய்து அதன்படி மறுநாள் தயார் செய்து வலை விரித்தான்.அடுத்த நாள் அங்கே வந்த புறாக்கள் தானியத்தைப் பார்த்ததும், அதை உண்ணும் ஆசையில் வேகமாக தரையிறங்கி உண்ணத் தொடங்கின. சில மணித்துளிகளில் அதன் கால்கள் வலைகளில் சிக்கிக் கொண்டன. சற்று தொலைவில் மறைந்திருந்த வேடன் நிலைமையை நன்கு புரிந்து கொண்டு புறாக்களை பிடிக்க ஓடி வந்தான். வேடன் வருவதைப் பார்த்த புறாக்கள் ஆபத்தை உணர்ந்து கொண்டு, உயிர் மீதுள்ள ஆசையினால் புறாக்கள் எல்லாம் ஒன்றாக இறக்கையை விரித்து பறக்க. வலையோடு புறாக்கள் பறக்க ஆரம்பித்தன. உடனே வேடன், அய்யய்யோ.... புறாக்கள் போனாலும் பரவாயில்லை. நான் கஷ்டப்பட்டு தயாரித்த வலையும் அதோடு போகிறதே... என்று புலம்பிக் கொண்டே, பறந்து செல்லும் புறாக்களின் பின்னே ஓடினான். பறந்து செல்லும்போதே, அதில் இருந்த மஞ்சள்ப் புறாக்கள் கர்வத்தோடு, எங்களது வலிமையால்தான் நீங்களும் காப்பாற்றப்பட்டு இருக்கிறீர்கள். நாங்கள் சிறகை மிக வேகமாக அடித்து பறக்கவில்லை என்றால்... அவ்வளவுதான் என்று கூறின. உடனே ஊதா நிறப் புறாக்களும் தன் பங்குக்கு, ஹஹநாங்கள்தான் வலிமையோடு பறந்தோம். உங்களுக்கு அழகு இருக்கலாம், ஆனால் ஆற்றல் கிடையாது என்று கூறிக் கொண்டு ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டே பறந்ததினால், அதன் பறக்கும் வேகம் குறைய ஆரம்பித்து, ஒரு மரக்கிளையில் வலை சிக்கிக் கொண்டது இதனைப் பார்த்த வேடனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ஒற்றுமையே வலிமை என்ற பழமொழிக் கேற்ப இப்புறாக்கள் தப்பிவிடுமோ என்று பயந்தான். நல்லவேளையாக "ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வு என்ற நெறிப்படி பறந்த புறாக்களே நன்றி என்று புறாக்களைப் பார்த்து கூறிக் கொண்டே . அவைகளை தனது கூடைக்குள் போடத் தொடங்கினான்.

**நீதி : எப்பொழுதும் ஒற்றுமையே சிறந்தது**

## ரமழான் வசந்தம் நிகழ்ச்சி










சம்மாந்துறை திறனொளி கலை கலாசார ஊடக வலையமைப்பினால் புனிதமிகு ரமழானை வரவேற்கும் வகையில் நடாத்தப்பட்ட "ரமழான் வசந்தம்" சிறப்பு நிகழ்ச்சி அண்மையில் பிர்தௌஸ் திறனொளி கலை கலாசார ஊடக வலையமைப்பின் கலைக்கூட வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிர்தௌஸ் ஆங்கில பாலர் பாடசாலை சிறார்கள், மத்ரஸதுல் ரவ்ழா மற்றும் மத்ரஸதுல் மதீனா மாணவர்கள் இஸ்லாமிய கலாசார நிகழ்ச்சிகளை வழங்கியிருந்தனர். அத்தோடு உலமாக்களின் மார்க்க சொற்பொழிவுகளும் இடம்பெற்றது. நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது பிடிக்கப்பட்ட படங்களைக் காணலாம்.




# குர்ஆன் மத்ரஸா அறிமுகம்

தயாரிப்பு:- அல்-ஹாபிழ் PM.பர்ஹானுத்தீன்
[செயலாளர், ஜம்மிய்யதுல் குர்ஆனில் ஹக்கீம்]





## காஸிபுல் உலூம் குர்ஆன் மத்ரஸா



மறுமைக்காய் மன்றாடும் மாண்பு மிகு அல்-குர்ஆனைப் பதித்து பட்டம் பெறும் வரைக்கும் பவ்மியமாய்க் கொண்டு வரும் இம் மத்ரஸா சம்மாந்துறையில் 127 மதீனா உம்மா வீதி, புளக் ஜே கிழக்கு - 03 எனும் முகவரியில் காஸிபுல் உலூம் மத்ரஸா மிகவும் சிறப்பாக இயங்கி வருகின்றது. இந்த மத்ரஸா மர்ஹூம் ஏ.எல்.சல்மா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு 20 வருட காலமாக இயங்கிக் கொண்டிருந்தது.

இதன் பின்னர் ஏ.எல்.ஆயிஷா உம்மா [ஜெஸ்மா] அவர்களால் தொடராக இயங்கி வருகின்றது. இம்மத்ரஸாவிலிருந்து பல மாணவர்கள் ஹிப்ளு மற்றும் கிதாபு பிரிவுகளுக்கும் சென்றுள்ளனர். இம்மத்ரஸாவில் 3 முஅல்லிமாக்களைக் கொண்டுள்ளது. ஏ.எல்.யூ.கதீஜா பீவி, எம்.எஸ்.எப்.சிம்லா, ஏ.எப்.றிப்னா ஆகியோர் ஆவார்கள். இங்கு தீனியாத், தஜ்வீத், துஆ, ஹதீஸ் அன்றாட ஒழுக்க விழுமியங்களுடனான மார்க்க சட்டதிட்டங்கள் போன்ற பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இது ஜம்மிய்யதுல் உலமாவின் கீழ் MRCA/AM/13/208 எனும் பதிவிலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் முஸ்லிம் சமய பண்பாட்டுத் திணைக்களத்தில் 1994ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டதாகும். இதன் தலைவர்களாக எம்.பி.அகமது லெவ்வை, எம்.எம்.எம்.யாஸீன் மௌலவி, உப தலைவராக ஏ.எம்.எம்.சலீம், செயலாளராக ஏ.எல்.ஹனீபா ஹாபிஸ், பொருளாளராக ஏ.எல்.ஜெஸ்மா, அதிபராக ஏ.எஸ்.அபூபக்கர் மௌலவி ஆகியோர்களால் இம்மத்ரஸா நிருவகிக்கப்படுகிறது. இம்மத்ரஸாவில் அஹதிய்யா பாடசாலையாக மர்கஸுத் தஃலீமில் ஹறமைன் எனும் பெயரிலும் AM 043 0364 - MRCA/AHA/AM/043 எனும் பதிவிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. மேலும் இம்மத்ரஸாவின் வளர்ச்சிக்காக உதவிய அனைவருக்கும் வல்ல நாயன் நல்லருள் பாலிப்பானாக! ஆமீன்!

## சாப்பிட்ட முன்/பின் ஓதும் துஆ

சாப்பிட முன் ஓதும் துஆ : பிஸ்மில்லாஹ் - அல்லாஹ்வின் பெயரால் உண்கிறேன் بِسْمِ اللّٰهِ

ஆரம்பத்தில் பிஸ்மில்லாஹ் சொல்ல மறந்துவிட்டால்: بِسْمِ اللّٰهِ فِيْ أَوَّلِهِ وَآخِرِهِ
பிஸ்மில்லாஹி ஃபீ அவ்வலிஹி வஆகிரிஹி
உணவின் தொடக்கத்திலும் அதன் முடிவிலும் அல்லாஹ்வின் பெயராலேயே (உண்கிறேன்)

சாப்பிட்டபின் ஓதும் துஆ:

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ أَطْعَمَنِيْ هٰذَا وَرَزَقَنِيْهِ مِنْ غَيْرِ حَوْلٍ مِنِّيْ وَلَا قُوَّةٍ

அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அமனீ ஹாதா, வ ரஸகனீஹி, மின் ஃகைரி ஹவ்லிம் மின்னீ வ லா குவ்வா
எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே. அவன்தான் இதை எனக்கு உண்ணத் தந்தான். என்னிடம் எந்த விதமான யுக்தியும் சக்தியும் இல்லாமலேயே அவன் எனக்கு இதை வழங்கினான்


## புதிய மாணவர்கள் அனுமதி

### ஸலாஹிய்யா அரபுக் கல்லூரி

பிபிலை, கொடிகமுவையில் அமைந்துள்ள மேற்படி அரபுக் கல்லூரிக்கு ஷரீஆ கிதாபு பிரிவு மற்றும் ஹிப்ழ் பிரிவுக்கு புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்ள விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்

The Principal
Salahiyya Arabic College
Godigamuwa, Kotabowa, Medagama
0555611689,0753428348,0768365660,0729874456

# நூல் அறிமுகம்

தயாரிப்பு: நௌஷாத் ஏ கரீம்



## சம்மாந்துறையின் அரசியல் வரலாறு

நூலாசிரியர்:- எச்.எம்.அன்வர் அலி MA (Psc), (SLPS)
சம்மாந்துறை

2012ம் ஆண்டு சம்மாந்துறை மண்ணில் வெளிவந்த எச்.எம்.அன்வர் அலி (SLPS) அவர்களின் "சம்மாந்துறையின் அரசியல் வரலாறு" எனும் நூல் வாசகர்கள் மத்தியில் பிரபல்லியமானது மாத்திரமன்றி உள்ளூர் மற்றும்வெளியூர்புத்திஜீவிகளின்பாராட்டையும்பெற்றுவிளங்கியது.ஐரோப் பியர் காலம் முதல் இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து 2012 வரையுள்ள இவ்வூரின் அரசியல் வரலாற்றை மிக ஆழமாக இந்நூல் பேசுகின்றது. சம்மாந்துறையில் இயங்கிய வன்னிமைகளின் ஆட்சி பற்றி 1639ல் இருந்து பலமான ஓர் ஆட்சி முறை சம்மாந்துறையில் இருந்து வந்துள்ளமையை நூலாசிரியர் குறிப்பிடுகிறார். மேலும் எமது நிர்வாக முறைமை. நீதி முறைமைகளை ஸ்திரமடையச் செய்வதில் குடிமக்களின் பங்கு பற்றியும் குறிப்பிடுகிரார். முக்கியமாக சுதந்திரத்தின் பின்னரான எமது அரசியல் வளர்ச்சியில் மர்ஹூம் எம்.ஏ.அப்துல் மஜீட் (அமைச்சர்) அவர்களின் அரசியல் பங்களிப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சம்மாந்துறையின் பௌதீக அபிவிருத்தியில் மஜீட் உட்பட ஏனைய அரசியல் தலைவர்களின் பங்கு தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் மாகாண அரசியல் பற்றியும் இந்நூல் பேசுகின்றது. மொத்தத்தில் எமது வரலாற்றையும் அதன் தொன்மையையும் பேசும் இந்நூல் பல்கலைக் கழக மாணவர்களின் ஆய்வு முயற்சிகளுக்கு பெரிதும் துணைபுரியும்.

எழுத்தாளர்களே! நூல் அறிமுகம் பகுதிக்கு நீங்கள் வெளியிட்ட புத்தகத்தின் பிரதியொன்றை எமக்கு அனுப்பி வையுங்கள் நூல் அறிமுகம் பகுதியில் உங்கள் நூலும் இடம்பிடிக்கும்

நூல் அறிமுகம்
திறனொளி
112, பிர்தௌஸ் பள்ளி வீதி
சம்மாந்துறை - 03


## நூல் அறிமுக விழா

உஸ்தாத் மன்சூர் BA
எழுதிய குர்ஆனிய சிந்தனை
ஜுஸ்உ அம்ம விளக்கவுரை பாகம்-1 எனும்
தப்ஸீர் எமது மண்ணில் வெகுவிமர்சையாக கடந்த
10.06.2017ந் திகதி
சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் இடம்பெற்றது.
பல மார்க்க அறிஞர்கள் இங்கு உரையாற்றினர். இலங்கை
முஸ்லிம்களின் வரலாற்றில்
அல் குர்ஆனுக்கு விளக்கவுரை எழுதும் ஆளுமை
உஸ்தாத் மன்சூர் அவர்களே முதன்மை
ஸ்தானத்தைப் பெறுகின்றார்.


## அஜ்வா ட்ரவல்ஸ்

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தினால் அங்கீகாரம் பெற்ற எமது அஜ்வா ட்ரவல்ஸ் நிறுவனம் இம்முறையும் புனித உம்ரா யாத்திரைக்கான சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்துள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். சுமார் 25 வருட கால ஹஜ் உம்ரா சேவையில் மிகுந்த அனுபவம் பெற்ற அல்-ஹாஜ் மௌலவி கே.எம்.நியாஸ் அல்-ஹாஜ் மௌலவி எம்.ஸஹ்ரான் ஹஸன் ஆகியோரின் நேரடி வழிகாட்டலில் உம்ரா செய்வதற்கான அறிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்

Ajwa Travels
( Airline Ticketing Hajj & Umrah Operators)
#463, 2nd Floor, Maradana Road, Colombo-10.
Tel : 0117 446322
Branch: Ajwa Travels
Fowzi Mawatha
Sammanthurai
Tel: 077 17 680 44



# விளையாடு களம்

தயாரிப்பு:- ஏ.ஐ.ஏ.சுஹைல் (Bsc)







கௌரவ பிரதமர் அவர்களின் பொருளாதார அலுவல்கள் மற்றும் கொள்கைகள் திட்டமிடல் அமைச்சின் பணிப்புரைக்கு அமைய தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் ஆகியவற்றின் மேற்பார்வைக்கு அமைய சம்மாந்துறை பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான யவுன்புர -2017 விளையாட்டு விழா சம்மாந்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவரும் தெற்காசியாவின் அதிக இளைஞர் அங்கத்துவத்தை கொண்டுள்ள இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் உப-தலைவரும் வைத்திய மாணவருமான அப்துல் றாஸாக் அஸ்ஸாம் அவர்களின் தலைமையிலும் இளைஞர் சேவை அதிகாரி ஏ.ஆர்.றியாஸ் அவர்களின் வழிகாட்டலில் சம்மாந்துறை பொது மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. இவ் விழாவிற்கு அதிதிகளாக உதவி பிரதேச செயளாளர் ஜனாப் ஆசிக் , மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ.லதீப், வலக்கல்வி விளையாட்டு ISA நஜாத் ஆகியோர் பங்குபற்றினர்.

(திறனொளி ஊடகப் பிரிவு)

## மிலேனியம் சமுர்த்தி வங்கியின் விளையாட்டு விழா

சம்மாந்துறை மிலேனியம் சமுர்த்தி வங்கியினால் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நடாத்தப்பட்ட விளையாட்டு விழா நிகழ்வு வீரமுனை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் வங்கியின் முகாமையாளர் எம்.ஐ.அஸாட் அவர்களின் வழிகாட்டலுடன் உதவி முகாமையாளர் ஏ.றசூல் அவர்களின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் அவர்களின் பிரத்தியேக செயலாளர் சட்டத்தரணி எம்.எம்.ஜெளபீர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

(தகவல்: ஹுஸைன்)



சம்மாந்துறைப் பிரதேச சமுர்த்தி வங்கிகளினால் தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டு முன்னிட்டு நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. உத்தியோகத்தர்களுக்கான மோட்டார் சைக்கிள் சங்கீதக் கதிரை நிகழ்சியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை கௌரவ பா.உ. எம்,ஐ.எம் மன்சூர் அவர்கள் வழங்கி வைத்த போது எடுக்கப்பட்ட படம்.

### குழு விளையாட்டுக்களில் ஈடுபடுவதனால் கிடைக்கும் நன்மைகள்

1) நம்பிக்கை அதிகரித்தல்.
2) சீரான உடற்பயிற்சி வழங்கப்படுதல்.
3) உறவுகளை வளர்த்துக் கொள்ளல்.
4) கல்வியிலும் திறமையானவர்களாக மாறுகின்றனர்.
5) வெற்றிக்கு வழிவகுத்தல்.
6) மதிக்கும் மனப்பாங்கை ஏற்படுத்தல்.
7) குடும்பத்துடனான ஈடுபாட்டை ஊக்குவித்தல்.

(றிமோஸ்-சம்மாந்துறை)

அறிவிப்பாளர்கள் தேவை



ஆஸாத் FM இணைய வானொலிக்கு அறிவிப்பாளர்கள் தேவை. அறிவிப்பு மற்றும் நிகழ்ச்சித்தயாரிப்பு போன்றவற்றில் ஆர்வமுள்ளவர்கள் பயிற்சி பெறுனர்களாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளதால் தொடர்பு கொள்ளவும்.

0779175963 / 0674905403

## விடை பெற்ற ரமழான் விடுக்கும் செய்திகள்

**07ம் பக்கத் தொடர்.......**

"ஒருவருக்கொருவர் கருணை புரிவதிலும் அன்பு செலுத்துவதிலும், இரக்கம் காட்டுவதிலும் இறை நம்பிக்கையாளர்களை ஓர் உடலைப் போன்று நீ காண்பாய். (உடலின்) ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடன் மற்ற உறுப்புகளும் உறங்காமல் விழித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் (உடல் முழுவதும்) காய்ச்சல் கண்டு விடுகின்றது" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: நு'.மான் பின் பஷீர் (ரலி)
நூல்: புகாரி 6011

இந்த ஹதீஸில் வருவது போன்று இஸ்லாமிய சமுதாயம் என்பது ஓர் உடலைப் போன்றது. அதன் இருதயமாக திருக்குர்ஆன் விளங்குகின்றது. இந்த இருதயம் ஆண்டுக்கொரு முறை அழைத்து துப்புரவுப்படுத்தி அனுப்புகின்றது. அது தன்னிடம் வருகின்ற மக்களிடம் ஒரு செய்தியையும் சொல்லி அனுப்புகின்றது. "ரமளான் மாதம் வந்து விட்டால் சொர்க்கத்தின் வாசல்கள் திறக்கப் படுகின்றன. நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன. ஷைத்தான் கள் விலங்கிடப்படுகின்றார்கள்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: புகாரி 1899

"உனக்கு அல்லாஹ் சுவனத்தைத் திறந்து வைத்து, நரகத்தை மூடி வைத்திருக்கின்றான்; ஷைத்தான்களை சங்கிலியால் பிணைத்து வைத்துள்ளான். சமுதாயத்தின் ஓர் உறுப்பாகிய நீ ஷைத்தான்களுக்குக் கட்டுப்பட்டு நரகத்திற்குச் செல்லாமல் அல்லாஹ்விற்குக் கட்டுப்பட்டு சுவனத்திற்குள் வந்து விடு! சமுதாயத்தின் ஓர் அங்கமாகிய நீ திருந்துவதன் மூலம் இந்தச் சமுதாயம் சீர் பெற்று, உனது உலக வாழ்க்கையும் மறுமை வாழ்க்கையும் சீராகி விடுகின்றது.நான் இறங்கிய ரமளான் மாதத்தில் எந்த அல்லாஹ்வைப் பயறந்து நீ வாழ்ந்தாயோ அதே அல்லாஹ்வை ன்றென்றும் பயந்து வாழ் இதுவே நான் இறங்கிய ரமளான் மாதம் விடும் செய்தியாகும்" என்று மானசீகமாக நமக்குக் கூறி நிற்கின்றது.

**06ம் பக்கத் தொடர்.......**

**இப்படி கேள்விப்பட்டீர்களா?**

**ஞாபகம் இருக்கு! ஞாபகம் இருக்கு!**

நிற்பதால், அதன் சுற்றாடலில் உள்ள கிணறுகள், கொட்டுகள், பூவல்கள் நீர்வற்றாது மக்களின் பாவனைக்கு பயன்பட்டன. விவசாயிகள் வயல் விதைப்புக்கான நெல்லை சாக்குகளில் கட்டி இளக வைக்கும் இடமாகவும் இக் குளங்கள் பயன்பட்டன. வெள்ள காலங்களில் மீன் பிடித்தல், சிறுவர்கள் நீச்சலடித்து விளையாடுதல் போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றன.

(கோஸப்பா)

**திறனொளியின் கேள்வி பதில்**
**தயாரிப்பு:-**
**மௌலவி ஐ.எல்.அப்துல் றஹீம்**
**(தப்லீகி)**

கேள்வி பதில் -04 இல் கேட்கப்பட்ட வினாவுக்கான சரியான விடை:- ஹிஜ்ரி 02 இல்

**கேள்வி பதில் -04 இற்கான வெற்றியாளர்**

எல்.எப்.எச்.சினோபா
114, கூட்டுறவுக் கடை வீதி.
சம்மாந்துறை.

இவருக்கு சம்மாந்துறை ஸ்டார் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் சார்பாக திறனொளியின் பாராட்டுக்கள். பரிசினைப் பெற 0674905403 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**கேள்வி பதில் -05**

**திறனொளியின் "கேள்வி பதில் -05" இற்கான கேள்வி**

அல்-குர்ஆன் இறங்கிய மாதத்தின் பெயர் என்ன?

**சரியான விடையினை தபாலில் எழுதி அனுப்பி பெறுமதியான பரிசினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

**பரிசு வழங்குவோர்:-**

சமூக நலப் பணிகளை முன்னின்று செய்து வரும் சம்மாந்துறை ஸ்டார் மகளிர் அபிவிருத்தி நிறுவன தவிசாளர் ஜனாப் எம்.றபீக் அவர்கள்.

விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:-

**கேள்வி பதில் - 05**
**திறனொளி**
**112, பீர்தௌஸ் பள்ளி வீதி**
**சம்மாந்துறை-03**

## சிந்தனைக்கு

**1- புரிந்து கொள்ளாதவர்கள் மனதில் இருப்பதை விட புரிந்து கொண்டவர்களின் நிழலாய் இருக்கலாம்.**

**2- ஒரு கவனக் குறைவான வார்த்தை சர்ச்சையில் முடியும். ஒரு கடுமையான வார்த்தை வாழ்க்கையை முறிக்கும். ஒரு கசப்பான வார்த்தை வெறுப்பை வளர்க்கும்.**

**3- தோல்விகளில் அடிபட்டால் உடனே எழுந்து விடு. இல்லையென்றால் இந்த உலகம் உன்னைப் புதைத்து விடும்.**

**4- அளவு கடந்த கஸ்டத்தை அனுபவிக்கின்றேன் என்று கவலைப்படாதே உனக்காக எல்லையில்லா சந்தோசம் காத்திருக்கும். வருத்தப்படாதே.**

தொகுப்பு: அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர் (ஜே.பி)
ஓய்வு பெற்ற அதிபர்

Let's learn English with effortless way

INTRODUCTION

A language is a means of expressing feelings, emotions and ideas. Every language consists of sentences. Every sentence is made up of words. Words are built of letters. There are twenty-six letters in English language. The letter 'a,e,i,o,u' are called Vowels. Others are called Consonants.

Vowel letters - உயிர் எழுத்துக்கள்

Consonant letters - மெய் எழுத்துக்கள்

இங்கு தமிழினை போன்று உயிர்மெய் எழுத்துக்கள் கிடையாது. அவற்றை நாம் தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

Ru mi - மெய் + உயிர் + மெய் + உயிர்

Bi na - மெய் + உயிர் + மெய் + உயிர்

**Language** மொழி

LETTER - எழுத்து

WORDS - சொற்கள்

SENTENCE - வாக்கியம்

**Letter** - எழுத்து

There are 26 letters in English.

ஆங்கிலத்தில் மொத்தமாக 26 எழுத்துக்கள் காணப்படுகிறது.

It's comes with two types.

இவை எந்த மொழிகளிலும் இல்லாதவாறு இரண்டு வகைப்படும்.

1. Capital letters (upper-case)
2. Small letters (lower-case)

Capital letters (upper-case)

A , B, C, D, E, F, G, H, I, J, K, L, M, N, O, P, Q, R, S, T, U, V, W, X, Y, Z

Small letters (lower-case)

a , b, c, d, e, f, g, h, i, j, k, l, m, n, o, p, q, r, s, t, u, v,w,x,y,z

**Words** - சொற்கள்

A single unit of language which has meaning and can be spoken or written. Words are created by simple letters. The word Royal is created by letter R, O, Y, A, and L)

The same way the following words are created.

E.g: Rumi, Sammanthurai, computer, table, go, come, bus, not, and I Etc...

**Sentence** - வாக்கியம்

A group of words. Sentences are created by words

தமிழினை போலவே இங்கும் ஒரு வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயற்படு பொருள் காணப்படுகின்றன.

1. Subject (எழுவாய்)
2. Predicate (பயனிலை)
3. Object (செயற்படு பொருள்)

தமிழில் பயனிலையானது இறுதியில் வரும் ஆனால் இங்கு நடுவில் பயனிலையும் இறுதியில் செயற்படு பொருளும் வரும். மேலும் பயனிலை ஒரு Verb ஆக வரும்.

| E.g: நான் | புத்தகம் | படிக்கிறேன் |
|---|---|---|
| எழுவாய் | பயனிலை | செயற்படு பொருள் |
| I | read | book |
| Subject | Predicate | Object |

The same way the following words are created.

| Sub | Pre | Obj |
|---|---|---|
| He | drives | car |
| Bina | writes | a poem |
| They | like | sweets |
| Banu | sings | a song |
| They | love | you |

**It's easy if you try**

Better luck next time with loving RuMi KhAAn

By :
Mr. M.T. RuMi KhAAn
(Director of Royal Future
The college of effortless way)

## நமது மண்வாசனை

### வந்தரிசிக்கும் பப்புளுக் காய்க்கும்

நமது மத்தியில் மறந்துபோன சுவாரசியமான நாவில் நீர் ஊறும் நல்லதோர் உணவு வகைதான் "வந்தரிசிச் சோறும், பப்புளுக்காய்க் கறியும்" ஒருவர் அதிகமாக ஒரு பொருளை விரும்பினால், ஆசைப்பட்டால் அல்லது விருப்பத்தோடு அளவுக்கதிகமாக சாப்பிட்டால் அவரைப் பார்த்து அன்றைய சமூகம் 'வந்தரிசிக்கும் பப்புளுக்காய்க்கும்' என பகடி பண்ணிக் கொள்வர். வந்தரிசிச்சோறு சாப்பிட்ட "மப்பில" (மந்தத்தில) விவசாயி ஒருவரின் நாட்டார் பாடலொன்று.

வந்தரிசிக்கும் பப்புளுக்காய்க்கும் வாய்த்த மாதிரி உன்புருஷன்
சோற்றுக்காக வயற்காட்டில் சேற்றில் நின்று மாய்கிறான்டி

இவ்வாறு பற்பல பாடல்கள் நாட்டார் இலக்கியத்தில் அதிக திகமுண்டு.

இனி வந்தரிசியையும் பப்புளுக்கயையும் தேடுவோம். அக்காலங்களில் தூய விதை நெல் கிடைப்பது அரிது. அதனால் ஒரு ஏக்கருக்கு 2 1/2 மூடை வீதம் நீரில் இளக வைப்பர். (இன்று ஏக்கருக்கு ஒரு மூடை வீதம்) நெல் முளை கட்டியதும் விதை நெல்லை பரவி எடுப்பர். முளைக்காத நெல்லை வேறாக்குவர். இவ்வாறு முளைக்காத நெல்தான் 'வந்த நெல்' என்று அழைக்கப்பட்டது. இந்த வந்த நெல்லை அவித்து, பதப்படுத்தி, உரலில் குற்றி அரிசியாக எடுப்பர். இவ்வரிசியைத்தான் 'வந்தரிசி' என்ற அன்றைய மக்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளன.

அக்காலங்களில் பப்பாசி மரங்கள் இல்லாத வீடுகள், வளவுகள் இல்லையென்றே கூறலாம். இப்பப்பாசிக் காயுடன் (பேச்சு வழக்கில் பப்புளுக்காய்)

தொடர் அடுத்த இதழில் (திறன்-09இல்)




# வாசகர் வட்டம்

தயாரிப்பு:- ஏ.ஆர்.எம்.ஹுஸைன்

## அபிமானிகள் அபிப்பிராயம்!

திறனொளி சஞ்சிகை பற்றி உங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அபிமானிகள் அபிப்பிராயம் பகுதியில் பிரசுரிப்போம். எழுதி அனுப்ப மறவாதீர்கள் உங்களின் அபிப்பிராயம் திறனொளியின் வெற்றிக்கு வழி வகுக்கும்.



நூலகர் செயினுல் ஆப்தீன் முஹம்மட் நௌசாட் சம்மாந்துறை கல்லரிச்சல் பொது நூலகத்தில் இருந்து சம்மாந்துறை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் களுக்கு திறனொளி சஞ்சிகைக்கு விடுக்கும் செவ்வி கல்வியின் நோக்கம் பரிபூரண புடம் போட்ட ஒரு மனிதனாக சமூகத்துக்குள்ளாக் குவது தான் இன்றைய காலத்தின் தேவை அதனை முழுமையாக பயன்படுத்தி பிறருக்கு வழங்கும் நிலையான தர்மமும்மாகும். மேலும் இன்றைய தொழிநுட்ப திறன் மேலோங்கிச் சென்று கொண்டு இருகின்ற காலத்தில் கைக்குள்ளேயே உலகத்தின் விடயங்களை அறிகின்றான் மனிதன். வாழ்த்துவதும் பிரமிப்பதும் ஒருபுறம் இருந்தாலும் "சீனா சென்றாலும் சீர் கல்வியைத் தேடு" என்ற பழ மொழிக் கொப்ப தேடல் ஒரு மனிதனை பூரணப்படுத்தும் பாடசாலைகள், ரியூசன் வகுப்புக்கள் மட்டுமல்ல நூலகங்களுமே ஒரு மனிதனின் சகல அறிவுக்கும் துணை நிற்கின்றான். பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு நூலகங்களை பற்றியும் அவற்றின் பிரயோசனங்களைப் பற்றியும் எடுத்துக் கூறுவது காலத்தின் தேவையாகும் "அறிவு தொலைந்த பொருள் அதை கண்ட இடத்தில் பற்றிக்கொள்" என முஹம்மது நபி(ஸல்) அவகள் கூறியுள்ளார்கள் இன்னும் நூலகங்களை மனிதன் நேசிக்கத் தொடங்கி விட்டால் மனித குற்றங்களும் தவறுகளும் குறைந்து செல்லும் அறிஞர் பேர்னாட்ஷா இன்னும் அறிவாளிக ளின் கூட்டம் உயிருள்ள நூல் நிலையமாகும் கவிஞர் வைரமுத்து "ஒரு நூலகம் திறக்கப்படும் போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படும்" மகாத்மா இவ்வாறு கல்வியின் மகத்துவம் பற்றி அறிஞர்கள் இவ்வாறு விளக்கியுள்ளார்கள். வாசகர்களின் கல்வி மேம்பட எமது நூலகங்களில் ஆண்டு தோறும் விழிப்பு ணர்வுகள் கண்காட்சிகள், போட்டி நிகழ்சிகள், பாடசாலை மாணவர்களை வகுப்பு ரீதியாக தயார்படுத்தி தரம் பிரித்து நடாத்துகின்றோம். ஏன் நூலகத் தின் பிரயோசனங்களை அடைவதற்கு மாணவ மாணவியர்கள் எந்த மட்டத்தில் உள்ளனர் என்பதையும் பரீட்சித்துப்பார்பதற்காகவும் நூலகத்தைப் பயன்படுத் தும் வினைத்திறனை அதிகரிக்கவும் சிறந்த எடுத்துக் காட்டான முயற்சியாக அமையும். நான் இந்த சிறப்பு கட்டுரையை எமது திறனொளி சஞ்சிகை யில் வெளியிடுகின்றேன் என்றால் அந்தந்த பாடசலை அதிபர்கள், ஆசி ரியர்கள், மாணவ மாணவிகளுக்கு சொல்வது ஒரு மணி நேரத்தயாவது நீங்கள் தினமும் நூலகத்துக்கு சென்று கற்க வேண்டும் கற்ற விடயத்தை நூலகரின் அல்லது நூலக உத்தியோகத்தரின் ஒப்பத்துடன் எமக்கு அடுத்த நாள் காண் பிக்க வேண்டும் என்ற தினிப்புக்களை அவர்களிடம் செலுத்தினால் நிச்ச யமாக நூலகம் செழிப்படையும் உறங்கியிருக்கும் நூலகங்கள் உயிர்பித்தெழும்.

நன்றி.!

உறுதுணை வழங்கும்

அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள்.



ஏ.ஜி.எம்.நிரோஸ்
292, மல் 7ம் வீதி
புளக் ஜே கிழக்கு
சம்மாந்துறை.
விருப்பமான துறை:
விளையாட்டு



எஸ்.எல்.எம்.இஹ்ஜாஸ்
325/4D, மல் 7ம் வீதி
புளக் ஜே கிழக்கு
சம்மாந்துறை.
விருப்பமான துறை:
விளையாட்டு

உங்கள் புகைப்படம் மற்றும் விபரங்களை அனுப்பி வாசகர் வட்டத்துடன் இணைந்து கொள்ளுங்கள்

## புதிய ஒரு பூபாளம்
## அறம்பூக்கும் ஈத்முபாறக் கவியரங்கு

சம்மாந்துறை மண்பதியில் கலை மற்றும் ஊடகம் ஊடாக அவ்வப்போது பல சரித்திரங்களைப் பொறித்து வரும் பத்திரிகையாளர், அறிவிப்பாளர், கலைச்சுடர் ஏ.ஸி. நௌஷாத் அவர்களது தலைமையில் இலங்குகின்ற "திறனொளி கலை கலாசார ஊடக வலையமைப்பு பூக்கின்ற புதிய ஒரு பூபாளமாகக் காத்திரமான கவி அரங்கு ஒன்றினை பயனுள்ள வகையில் நடாத்த இருக்கிறது. அறம்பூக்கும் ஈத்முபாறக் கவி அரங்கு எனும் தலைப்பில் பொழிகின்ற கவிதை மழையில் சுகம்கான ஆர்வலர்கள் பலரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம், இடம்:- பெருநாள் மூன்றாவது தினம் (பி.ப 3.30 முதல்)

திறனொளி கலை கலாசார ஊடக வலையமைப்பு

கலைமன்ற வளாகம், சம்மாந்துறை

தலைமை

மூத்த கவிஞர் கலாபூஷணம் மாறன்-யூ.ஸெயின்

(தலைவர்-சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கம்)

கவிதை மழை பொழியும் கவிஞர் - கவிஞினிகள்

01- கலாபூஷணம் ஏ.ஸி.இஸ்மாலெவ்வை
02- கலாபூஷணம் பரீதா இஸ்மாயில்
03- கவிதாயினி ஜுல்பிகா ஸெரீப்
04- கவிஞர் ஏ.அஸீஸ்
05- கலைஞர், டாக்டர் எம்.சி.எம்.காலித்
06- கலைத்தென்றல் ஏ.அகமட்
07- கவிஞர் இஸ்மாயில் ஏ முஹம்மட்
08- கவிஞர் எம்.எச்.ஆதம்பாவா (அபு அப்கான்)
09- கலைஞர், அறிவிப்பாளர் ஏ.எல்.அன்சார்
10- கவிதாயினி எம்.ஐ.றமீஸா
11-கவிஞர் எஸ்.றகுமதுல்லாஹ்
12- கவிஞர் றிஸ்கான் மன்ஸில்
13- கவிஞர் ஏ.எம்.முபாஸித் அல்பத்தாஹ்

நிகழ்வுகள் ஆஸாத் FM இணைய வானொலி, திறன் TV முகநூல் ஊடாக நேரடி ஒளி ஒலிபரப்பு செய்யப்படும்.

வாடிக்கையாளர்களுக்கு ஈகைத் திருநாள் வாழ்த்துக்கள்

ஈத்முபாரக்

**சம்மாந்துறையில் உதயமாகியுள்ளது!**


36 வருட கால அனுபவத்தைக் கொண்ட

ஐ. அப்துல் றஹீம் அன்ட் பிரதர்ஸின் இணை நிறுவனமான

# ARB HOME LUXURY




பியாஸ்ரா, தம்ரோ, நில்கமல் தயாரிப்புக்களின் சொகுசான சோபாக்கள்






வீட்டுத்தளபாடங்கள் மற்றும் காரியாலயத் தளபாடங்கள் அனைத்து மின் உபகரணங்களும் எங்குமில்லாத நியாயமான விலை



உத்தரவாதமுள்ள ஜப்பான் தயாரிப்பான புதுப்பொலிவுமிக்க மெத்தைகள்







**அனைத்துப் பொருட்களையும் நியாயமான விலைகளில் பெற்றுக் கொள்ள உடன் நாடுங்கள்**

Preethi | Panasonic | Piyestra | INNOVEX | Hisense

**ARB HOME LUXURY**

223, Ampara Road

Sammanthurai

Tel: 0672055554, 0773581554

E-mail:arb.homeluxury@mail.com

fb: ARB HOME LUXURY


இச் சஞ்சிகையானது, சம்மாந்துறை திறனொளி கலை கலாசார ஊடக வலையமைப்பினால் வெளியிடப்படுகிறது.